**IN THE COURT OF II JUDGE, SMALL CAUSES, CHENNAI**

---

**M.C.O.P.No.634/2016 & 5352/2018**

Deposition of Witness : RW 1
Name : Rajendran

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 27th day of January, 2025.

---

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தின் பத்தி 6 ல் காவல் ஆய்வாளர் இறந்துபோன எனது மகனின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்துதாரர்கள் மூன்பு பிரேத விசாரணை செய்தார்கள் என்று சொல்லியுள்ளேன். அந்த பிரேத விசாரணை அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரேத விசாரணை அறிக்கை சாட்சியிடம் காண்பித்து அதை அவர் மூலம் குறியீடு செய்யவேண்டும் என்று கேட்கப்பட்டது. அந்த ஆவணத்தை தயார் செய்த நபர் காவல் ஆய்வாளர் என்பதால் இந்த சாட்சியின் மூலம் அந்த ஆவணம் குறியீடு செய்ய அனுமதிக்கப்படவில்லை. பிரேத விசாரணை அறிக்கையில் இறந்துபோன மணிகண்டன் திருமணம் ஆனவர் என்று குறிப்பிட்டுள்ளதால்தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. யோகேஷ் என்பவர் என்னுடைய மருமகன். பாலாஜி என்பவர் என்னுடைய மனைவியின் சகோதரியின் மகன். ம.சா.ஆ.4 ஆவணம் என்னுடைய மகன் தாம்பரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்த உத்தரவாத

கடிதம் என்றும், அதில் மேற்படி யோகேஷ் மற்றும் பாலாஜி என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.5 ஆவணம் என்னுடைய மகன் மனுதாரர் புஷ்பராணியை திருமணம் செய்தத்றகான பதிவு சான்றிதழ் என்றால் அது போலியான சான்றிதழ். ம.சா.ஆ.5 ஆவணம் பதிவு சான்றிதழ் போலி என்று காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எ.ம.சா.ஆ.5 என்பது 14.11.2017 தேதியிட்ட வாரிசு சான்றிதழில் இறந்துபோன நபரின் தாயார் கண்ணியம்மாள் பெயர் மட்டுமே உள்ளது. 14.11.2017 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் முறையாக விசாரணை செய்யாமல் வழங்கப்பட்டது என்றும், அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.5 ல் இணைக்கப்பட்டுள்ள 15.02.2023 தேதியிட்ட வாரிசு சான்றிதழும் ம.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள வாரிசு சான்றிதழும் ஒன்றுதான் என்றால் சரி. 15.02.2023 தேதியிட்ட வாரிசு சான்றிதழில் மனுதாரர் புஷ்பராணி பெயர் முதல் வாரிசாக சேர்க்கப்பட்டு இறந்துபோன நபரின் மனைவி என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் இழப்பீடு பெறுவதற்காக அந்த சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.12 ஆவணம் குறியீடு செய்யும்போது அதற்கு ஆட்சேபணை செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.12 ஆவணம் குறியீடு

செய்யும்போது அது போலி என்று ஆட்சேபணை செய்யாததால் போலி என்று கூறுவதை நாங்கள் நிருபிக்கவில்லை என்றால் சரியல்ல. 15.02.2023 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி வழங்கப்பட்ட ஆவணம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாரிசு சான்றிதழ வழங்கிய வட்டாட்சியரை சாட்சியாக விசாரிக்க உள்ளீர்களா என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும், அவரை விசாரிக்க உள்ளோம். இறந்துபோன எனது மகன் சென்னையில் HBL Global Pvt. Ltd.,–ல் பணிபுரிந்து வந்தார் என்றால் சரி. என் மகன் இறந்தபிறகு மேற்கூறிய வங்கியில் இருந்து அவரது பணிக்கொடை எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் என் மனைவியிடம்தான் கொடுத்தார்கள், அது எவ்வளவு என்று எனக்கு தெரியாது. என்னுடைய மனைவியின் வங்கி கணக்கு விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது மகன் இறந்ததற்கு பணிக்கொடையாக HBL Global Pvt. Ltd.,–ல் இருந்து ரூ.5,00,000/– கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, பிரேதத்தை அடக்கம் செய்வதற்காக சிறு தொகை கொடுத்தார்கள். எனது மகன் இறந்தபிறகு அவர் வேலை பார்த்த வங்கியில் இருந்து ரூ.2,066/– மாதம் மாதம் ESI pension வருகிறது என்றால் சரி. தோராயமாக ரூ.2 இலட்சம் வந்திருக்குமா என்றால் கணக்கு பார்த்தால்தான் தெரியும். 14.11.2017 ல்

முறையாக விசாரிக்காமல் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழை வைத்து மேற்படி பலன்களை பெற்று வருகிறோம் என்றால் தவறு. எனக்கு மணிகண்டன் மட்டுமே ஒரே மகன், மேலும் இரண்டு மகள்கள் உள்ளனர். நான் ஏற்கனவே இதுவரை ரூ.7 இலட்சம் தொகையை எனது மகன் இறப்பிற்கு அவர் வேலை பார்த்த வங்கியில் இருந்து பெற்றுள்ளோம் என்றும், அதனால் இழப்பீடு பெற தகுதியை இழந்துவிட்டோம் என்றால் சரியல்ல. அந்த தொகை முறையாக விசாரிக்கப்பட்டு எங்களுக்கு வழங்கப்பட்டது. மனுதாரர் புஷ்பராணி இறந்துபோன எனது மகன் மனைவி என்றும், அதனால் மனுதாரர் புஷ்பராணி முழு இழப்பீடு பெற தகுதி உடையவர் என்றால் சரியல்ல. நானும் எனது மனைவியும் எனது மகனின் இறப்பிற்காக அன்பு மற்றும் பாசம் என்ற தலைப்பின்கீழ் மட்டுமே இழப்பீடு பெற தகுதி உடையவர் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த மனு எண் 5352/2018 தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மனுதாரர் புஷ்பராணி தாக்கல் செய்த மனுவில் கேட்டுள்ளபடி அவருக்கு மட்டும் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4 முதல் 9 வரை உள்ள விவரங்கள் பொய்யாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 2 வது எதிர்மனுதார் தரப்பில் –**

**இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

Sd./
Signature of witness

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date: 27.01.2025

Sd./
II Judge
Court of Small Causes, Chennai